# Mu.Ra-vin Aalumaigal (Enthai)

**Dr. M. Sugavasan**
*Assistant Professor, Department of Tamil*
*Thiruthangal Nadar College, Selavayal, Chennai*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: ஜனவரி**

**வருடம்: 2026**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.18358740

**Abstract**

*Literatures must be reflected and felt through time. They can help in understanding the present situation. MU.RA (M.Ramesh) has undertaken reading with this aim. In an era when there was a notion in the field of Sangam literary studies that research on literature had concluded, it is only now that Sangam literary studies are predominantly coming to light. Through M. Ra's personality, it is conveyed that there is still room for further research in Sangam literature. In the book he authored, he marvels to the extent that everyone praises, "The glory of the previous era where mother and daughter rejoiced together." The term 'enthai' draws our attention to a multidimensional aspect. Each work allows one to feel a deep and broad understanding of its meaning. This essay explains M. Ra's personality.*

***Keywords:*** *Genetic Environment, Co-pilot, Hope, Fertilizer, Pulaiyar, Buddha, Sangam, Dhamma, Three Jewels, Virtue, Bookworm, Buddhism.*

**Reference**

1. M.Ramesh - Enthai (Pazhansamuga mozhip panpaattuk katturaigal), Vellum Sol, 30-A, V.O.C. Street, Nanganallur, Chennai-600 061. Feb-2019
2. Puliyurk Kesigan - Purananuru - Ritham Book Distributers, Dec-2022.
3. Gowmariswari S - Pathinen Kilkanakku Noolgal - Saradha Pathippagam, Chennai-14, 2009

# மு.ரா–வின் ஆளுமைகள் –(எந்தை)

***முனைவர். மு. சுகவாசன்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
திருத்தங்கல் நாடார் கல்லூரி, சேலவாயல், சென்னை

***ஆய்வுச் சுருக்கம்***
*இலக்கியங்கள் காலத்தால் பிரதிபலிக்கப்பட்டு உணரப்பட வேண்டும். இவை, இன்றைய நிலைபேறுக்கு ஏற்றவாறு உதவமுடியும். இந்த நோக்கிலான வாசிப்பையே மு.ரா அவர்கள் முன்னெடுத்துள்ளார். சங்க இலக்கிய ஆய்வுலகத்தில் இலக்கியங்கள் குறித்த ஆய்வுகள் முடிந்துவிட்டது என்று பேசுப்பொருளாக இருந்த அச்சூழலில் இப்போதுதான் சங்க இலக்கிய ஆய்வுகள் பெரும்பான்மையாக வெளிவந்துக் கொண்டே இருக்கின்றன. சங்க இலக்கியத்தில் ஆய்வுகள் தொடர்வதற்கு ஏராளமாக இருக்கின்றன என்று எண்ணுவதற்கு மு.ரா–வின் ஆளுமையின் மூலம் புலப்படுத்துக்கின்றது. இவர் இயற்றிய எந்தை நூலில் "எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவிய முந்துநிலத்தின் பெருமையை அனைவரும் புகழ்ந்து போற்றும் அளவிற்கு வியந்துரைக்கின்றார் இந்நூலாசிரியர். "எந்தை" ஒரு பன்முகக் களத்தை நமக்கு கவனப்படுத்து கிறது. ஒவ்வொரு இயலும் அதன் பொருளுக்கேற்ப ஆழ அகலத்தை உணர வைக்கிறது. மு.ரா–வின் ஆளுமை – எந்தை பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.*

**முன்னுரை**

அனைவராலும் போற்றத்தக்க மதிப்பு மிக்க அவருடைய செல்லப் பெயர் மு.ரா ஆகும். தாய் தந்தையார் வைத்த இயற்கையின் அற்புதப்பெயர் மு.ரமேஷ் ஆகும். தர்மபுரி மாவட்டத்தில் மேல் அக்ரகாரம் என்னும் குட்டம்பட்டி சிற்றூரில் **1983** ஆம் ஆண்டு பிறந்தார். கல்லூரி படித்துக்கொண்டு இருக்கும்போது நூல்களை வாசிப்பதில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டவர். ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்ட ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொண்டு இருக்கும்போது அரசுப் பணியை முதன்முதலில் குடியேற்றம் அரசு கல்லூரியில் பணியில் சேர்ந்தார். அதன்பிறகு அரசு ஆடவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி நந்தனம் பணியிடம் மாற்றம் பெற்றார். இந்த நந்தவனக் கல்லூரியில் வந்தபிறகும் தன்னுடைய ஆராய்ச்சியின் மீதும், வாசிப்பின் மீதும் மோகம் கொண்டு பல அரிய நூல்களை இக்கல்லூரியில் எழுதி வெளியிட்டார். அதுமட்டு மில்லாமல் மணிமேகலைக் காப்பியத்தில் பேரிடர் மேலாண்மை என்னும் நூலை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் தொல். திருமாவளவன் அவர்கள் முன்னிலையில் இத்தகைய அற்புதமான நூலை மார்ச் **2021**-ஆம் ஆண்டு வெளியிட்டார். நந்தவனத்தில் சுதந்திரமாக இருந்து பல நூல்களை வெளியிட்டியிருக்கின்றார்.

**2023**-ம் ஆண்டிற்குப் பிறகு மாநிலம் போற்றும் மாநிலக் கல்லூரியில் இடம் பெயர்ந்தார். அங்கும் தன்னுடைய ஆராய்ச்சி நூலான மணிமேகலை காப்பியம் வாசித்தலும் பகிர்தலும் என்னும் **10** கட்டுரைகளின் தொகுப்பு நூலான **46**-ஆம் ஆண்டு சென்னை புத்தகக் காட்சியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட வாசகர்கள் முன்னிலையில் வெளியிடப்பட்டது சாதனையாகக் கருதபடுகிறது. இலக்கியத்தின் மீதும் சமூகத்தின் மீதும் அவர் எழுப்பும் கேள்விக்கணைகளும் சிந்தனை நிகழ்வுகளும் அதற்கு விடை தேடி அடுத்த கட்டத்திற்கு நகர்வதும் தொடர்ந்து வாசிப்பதும் மு.ரா அவர்களை ஆளுமைகளில் ஆளுமையாளராக அடையாளம் காட்டுகின்றது.

## ஆராய்ச்சிக் கட்டுரைகள் (ம) நூல்கள்

30க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளும், 13-க்கும் மேற்பட்ட நூல்கள் புத்தகமாக வெளிவந்துள்ளன. தமிழ்ச் சங்க மரபில் புத்த சங்க மரபு, என் தேசத்தை ஜெதிகள் கவிதை தொகுப்பு - 2002, வார்த்தைக்குள் சிக்காத இரவின் உயரம் கவிதை தொகுப்பு - 2005, மழையில் கரையும் இரவின் வாசனை -2007, தமிழ் கூறும் காட்சி அதிகாரம் கட்டுரை- 2008, கவிதையால் மறுவாசிப்பு கட்டுரைத் தொகுப்பு -2009, வரலாற்று பன்மையும் தேசிய ஒடுக்கமும் கட்டுரைத் தொகுப்பு -2012, பழந்தமிழில் சமூக சமய மரபுகளும் பனுவர் ஆக்க கோட்பாடுகளும் கட்டுரைத் தொகுப்பு -2014, எந்தை பழஞ் சமூக - மொழி பண்பாட்டு கட்டுரைகள் -2019, மணிமேகலை காப்பியத்தில் பேரிடர் மேலாண்மை முதற்பதிப்பு மார்ச்-2021, இரண்டாம் பதிப்பு மார்ச் -2022, சங்க இலக்கியத்தில் நிலங்கள் - குடிகள் - வழிபாடுகள் ஜூலை-2021, சங்க இலக்கியத்தில் சமயங்களும் மெய்யியல் கூறுகளும் அக்டோபர்-2021, மணிமேகலைக் காப்பியம் வாசித்தலும் பகிர்த்தலும் ஜனவரி-2023, புத்த அறநெறி நோக்கில் திருக்குறளும் மணிமேகலையும் டிசம்பர்-2024, வேடிக்கைப் பார்க்கும் இருள் - டிசம்பர் -2024, புத்தம்+திராவிடம் = சமூகநீதி மணிமேகலைக் காப்பியத்தை முன்வைத்து, தன்னடையாளங்களை எழுதிப் பார்த்தால் சமகால இலக்கியக் கட்டுரைகள் என இரு நூல்கள் கோட்டூர்புரத்தில் உள்ள தமிழ் இணையக் கல்விக் கழக அரங்கத்தில் 20/02/2026 அன்று வெள்ளிக்கிழமை மாலை 03.00 மணி அளவில் எழுச்சித்தமிழர் முனைவர் தொல்.திருமாவளவன் அவர்களின் தலைமையில் பொற்கரங்களால் அவருடைய வெளியிடப்பட இருப்பது போற்றுதலுக்குரியதாகும். இவ்விரு நூல்களுக்கும் நடப்பாண்டின் (2026) தமிழ்நாடு அரசின் மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோ.வி.செழியன் அவர்கள் சிறப்புரை ஆற்ற இருப்பது சிறப்புக்குரியதாக கருதப்படுகிறது.

மு.ரா-வின் நூல்களில் முதன்மையாக பேசப்படுகின்ற பல நூல்கள் இருந்தாலும் அவற்றின் தமிழ்நாடு அரசால் முதன்முதலாக நிதி உதவி பெற்று வெளியிடப்பட்டுள்ள எந்தை பழஞ்சமூக - பண்பாட்டுக் கட்டுரைகள் பற்றிய நூலை ஆதாரமாகக் கொண்டு இவ்வாராய்ச்சி ஆய்வு கட்டுரையில் “மு.ரா-வின் ஆளுமை - எந்தை பற்றி விரிவாகக் கூறுகின்றது.

தமிழ்ச் சமூகம், தமிழ் மரபு என்பவையே இந்த மைய இழை. நீண்ட நெடிய, தொடர்ச்சியான இந்த மரபில் தொன்மைத் தொடங்கி இன்று வரையிலான உயிரோட்டத்தில் பல்வேறு நிலைகளில் புத்தகங்கள் தோன்றியுள்ளன.

மனித குலத்தின் வரலாற்றில் பண்பாட்டு வரலாறு மிகவும் ஈர்ப்பானது. மானுடத்தின் அனைத்துத் தொழிற்பாடுகளும் இணையும் இடம் பண்பாடு. அதில் உறவுமுறைச் சொற்கள் சுட்டி நிற்கும் வரலாறு மிகவும் வியப்பானது. ஆதியில் பெண்ணுடன் உறவு கொண்டவர்கள் பலரும் பிறந்த குழந்தைகளால் அறியப்பட்டதில்லை பிறந்த குழந்தைகளால் அறியப்பட்டதில்லை. தாய் மட்டுமே அறியப்பட்டாள். இந்த ஆண் மையம் அழிந்த பாலின நிலை வெகு காலத்திற்குப் பிறகு மாறுகின்றது. சங்கக் காலத்தில் பயின்று வந்த தாயைக் குறிக்கும் எட்டு சொற்களையும், தந்தையை குறிக்கும் நான்கு சொற்களையும் தெளிவாக எடுத்துக்காட்டுகிறார்.

தமிழர் பண்பாட்டு வரலாற்றில் அதிகம் கவனம் பெறாத பகுதி இது. எனவே, தந்தை நிலையில் இருந்து ஐயன், தலைவன், இறைவன் வரை இந்த சொல்லாட்சிகள் நீளுகின்றன. இதனை கோர்மைப்படுத்தும் இயல் நம்மை பூர்வக் காலத்திற்கு அழைத்துச் செல்கிறது.

## மொழியும் - இனச்சூழலும்

குறிப்பிட்ட நிலப் பண்பாடு, தொழில், நம்பிக்கைகள், வழிபாடுகள் இவற்றைப் பின்னணியாக உடையது என இனச்சூழல் அல்லது இனப்பண்பாட்டுச் சூழல் எனப்படுகிறது. இந்தக் கூறுகளால் ஒரு மனிதக் கூட்டம் சமூகமாக வடிவமைக்கிறது. சமூக வடிவமைப்பில் மொழியின் பங்கு மிக இன்றியமையாதது. மனித உடலுக்குள் மனிதன் என்கிற உணர்வை ஏற்படுத்தியது மொழிதான். மனிதன் என்கிற

உணர்வு எத்தகைய பழமையானதோ அதனினும் கொஞ்சம் பழமையானது மொழி.

குமரி முதல் வடவேங்கடம் வரை உள்ள நிலப்பகுதிகளை செந்தமிழ் நிலம் என்கிறார். இதனை,

**"வட வேங்கடந் தென்குமரி**
**ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து**
**வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலின்**
**எழுத்துஞ் சொல்லும் பொருளுநாடி"**

என்றமையானும், இதனுள் தமிழ் கூறு நல்லுலகமென விசேடித்தமையானும், கிழக்கும் மேற்கும் எல்லைக்கூறாது தெற்கில்லை கூறியதனால் குமரியின் வடக்கும், குணகடலின் மேற்கும், கூட கடலின் கிழக்குமாகிய நிலம் செந்தமிழ் நிலமென்றுரைப்ப" என்பர் தெய்வச் சிலையார்.

### எந்தை என்னும் சொல்

**"ஆசாகு எந்தை யாண்டுள்ள கொல்லோ**
**இனி பாடுநரும் இல்லை பாடுநர்க்கு ஒன்று**
**ஈகுநரும் இல்லை பனித்துரைப் பகன்றை**
**நரைக்கொள் மாமலர் சூடாது வைகியாங்கு பிறர்க்கு**
**ஒன்று ஈயாது வீயும் உயிர்தவப் பலவே"**

**- புறம்.235**

எந்தை என்ற சொல் குடிகளின் தலைவன், காதல் தலைவன், அரசத் தலைவன், குடும்பத் தலைவன் ஆகிய பொருள்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றாலும் தந்தை என்ற உறவுமுறை பெயராகத் தற்போது பொருள் கொள்ளப்படுகிறது. இரத்த உறவுமுறைச் சொற்கள் மட்டும் இடம்பெற்றுயிருப்பதை கவனிக்க முடிகிறது." முன்னொட்டுப் பெயர்கள், தனிநிலைப் பெயர்கள், அடுக்கு நிலைப் பெயர்கள் மற்றும் ஆக்கப்பெயர்கள் என பொதுவாக தமிழில் காணப்படும் உறவுமுறைப் பெயர்களை வகைப்படுத்தி விளக்குகிறார்.

### செறுமான்

செறுமான் என்ற பெயர் சிறியது எனப் பொருள்படும். செறு ( சிறு ) என்ற பகுதியில் அடியாக பிறந்ததாதல் வேண்டும் அல்லது அது குட்டை அல்லது தாழ்வான வயல் என்ற பொருள் தரும் என்ற சொல்லிலிருந்து பிறந்ததாதல் வேண்டும். தர்ஸ்ட்டனின் இந்த அறிக்கையிலிருந்து மலபார் செறுமான் அல்லது புலையர் குறித்த கருத்துக்கள் பின்வருமாறு தொகுத்துக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் முன்பேச் சொல்லப்பட்டது போல சங்க இலக்கியத்தில் புலையரை மதிப்பிட உதவும் என்பதால்

**முருகுமெய் பட்ட புலைத்தி போல**

**- (புறம்.259)**

**துடியெறியும் புலைய எரிகோல் கொல்லும்**

**- ( புறம்.287)**

**புலைத்தி கழிஇய தூவள்ளருவை**

**- ( புறம்.311 )**

**புல்லமத்திட்ட சில்வீழ் வல்சி புலையான்**
**ஏவபுல் மேல் அமர்ந்து**

**- (புறம்.360)**

துடியர், பறையர், வள்ளுவர், வெட்டியான் ஆகியோரை புலையர் என அருவறுக்கிறது பழந்தமிழர் இலக்கியமான புறநானூற்றில் கூறப்படுகிறது.

### புத்த சங்கமும் பழந்தமிழ் மரபும்

இன்றைய காலத்தில் நமக்குப் பழந்தமிழ் மரபாகக் கிடைப்பவை சங்க இலக்கியங்கள் ஆகும். இந்திய துணை கண்டத்தில் இலக்கிய மரபுகளுக்கு முன்னோடி என்பது மட்டுமில்லை தனித்தன்மை வாய்ந்தவையாக இருக்கின்றது. கி.மு 500-வாக்கில் அதிகாரப்பூர்வமாக சங்கத்தை அமைத்தவர் கௌதம புத்தராவர். புத்த சமயத்தின் மும்மணி கோவையில் நடுவு நிலையாக இருப்பது "சங்கத்திற்கு என்னை அர்ப்பணிக்கிறேன்" என்பதாகும். புத்தம், சங்கம், தம்மம் என்பவை "திரி ரத்னா" எனப்படுகிறது.

### சங்க இலக்கியத்தில் ஆயரும் கோவலரும்

உலகில் தோன்றிய நாடோடி இனமாக ஆயர்கள் அறியப்படுகிறார்கள். இவர்கள் கால்நடைச் செல்வங்களுக்கு மேய்ச்சல் நிலங்களைத் தேடி அலையும் குடிகளாகவும் இருக்கின்றனர். நாடோடி வேளாண்மை என்கிற

குறுகியக்கால குறுவைப் பயிர்த்தொழிலை மேற்கொண்டதாக தெரிகிறது. ரிக்வேத ஆரியர்களை விட சங்க இலக்கிய ஆயர்கள் நாகரிகத்திலும், பண்பாட்டிலும், உணவுப் பழக்கவழக்கத்திலும், உற்பத்தி முறையிலும் மேம்பட்டவர்களாக உள்ளனர்.

உணவுப் பண்பாடு முறையில் முல்லை நிலத்து உணவுமுறை பெரிதும் உற்பத்தியோடு தொடர்புடையது. உணவுப் பண்பாட்டை விளக்குவதன் மூலம் ஆயர்களின் வேளாண் முறையையும் உணர முடிகின்றது. குறிஞ்சி நிலத்திலிருந்த வேட்டையாடுதல், உணவு சேகரித்தலோடு தீயைப் பயன்படுத்திச் சுடுதல், வதக்குதல் என்பவற்றையும் தாண்டி வேகவைத்து உண்ணுவதையும் கண்டுபிடித்தனர்.

### அறநெறிக் கருத்துக்கள்

சங்க இலக்கிய நூல்களில் ஒன்றான கீழ்க்கணக்கு என கூறப்படுகின்ற 18 நூல்களில் 11 அற நூல்கள் ஆகும். விளம்பிநாகனார் இன்னும் புலவர் இயற்றிய நான்மணிக்கடிகையும் நூலும் ஒன்று. விளம்பிநாகனார் என்கிற அறிவரால் ஆக்கப்பட்ட இந்நூலில் வெண்பாவிலும் மணித்துண்டங்களைப் போல நான்கு நான்கு அறக்கருத்துக்களை கொண்டுள்ளதால் இந்நூல் நான்மணிக்கடிகை எனப் பெயர் பெற்றது.

சட்டம், நீதி, யாப்பு, விதி, ஒழுக்கம், விழுமியங்கள், என் மனம் போன்ற பல பொருள்களை அறம் என்கிற சொல் கொண்டிருப்பதனைக் காணமுடிகிறது. பாலி மொழியில் வரும் தம்மமும், தமிழில் வரும் அறமும் ஒன்றெனத் தெரிகிறது.

தமிழில் காணப்படுகிற அற இலக்கியங்கள் வெண்பாக்களால் ஆனவை என்பது குறிப்பிடத்தக்கது. “பழமொழி நானுறைப் போல கடினமாக அல்லாமல் எளிமையாகவும் இனிமையாகவும் காணப்படுகிறது”. என்னுள் திருமால் பற்றிய பாடலை கடவுள் வாழ்த்தாவது என்னுள் திருமால் பற்றிய பாடலை கடவுள் வாழ்த்து கொண்டுள்ளதால் இந்நூல் திருமால் பற்றிய பாடலைக் கடவுள் வாழ்த்தாகக் கொண்டுள்ளதால் விளம்பிநாகனார் வைணவராக இருக்கலாம் என்கிற கருத்து சொல்லப்படுகிறது. நான்மணிக்கடிகையில் காணப்படுகிற அரசனுக்கு இருக்க வேண்டிய ஒழுக்கங்கள் காதாசப்தசதி பாடலிலும் காணப்படுகிறது. ஊர் தலைவனின் மகன் என்கிற பாடலில் மேலே சொல்லப்பட்டுள்ள நான்மணிக்கடிகை அறத்தைப் போலவே இந்த அறக்கருத்தும் அமைவதைப் பார்க்கலாம்.

### பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்

பழந்தமிழ்ச்சமூகத்தில் கடைப்பிடிக்கப்பட்ட பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் பழமொழி நானூற்றில் சுட்டப்படுகின்றன. பார்ப்பனர் உடும்புக்கறி என்ற செய்தியைப் பழமொழி வெண்பாவில் காணமுடிகிறது. இந்தச் செய்தியைப் பெரும்பாணாற்றுப்படையிலும் காணமுடிகிறது. எருமைக்கறி உண்ணும் பழக்கமும் இருப்பதை பழமொழி நானூறு சுற்றுகிறது. குடியில் உயர்வு தாழ்வு குறித்த நம்பிக்கைகளும், உழ்வினைக் குறித்த நம்பிக்கைகளும் சமூகத்தில் இருந்தமையைப் பழமொழி வாயிலாக அறிய முடிகிறது.

### புத்தகோசர்

தேரவாதியாக அறியப்படுகிற புத்தகோசர் இந்தியத் துணைக் கண்டத்துத் தென்பகுதியில் உள்ள சோழ நாட்டில் சிறிது காலம் இருந்தவர். இலங்கை என்று சொல்லப்படுகிற ஈழத்து மகாவீரையிலியிருந்து திரும்பி வந்து தனது தாயகமான சோழ நாட்டு தலைநகரான உரகுபுரம் என்று சொல்லப்படுகிற உறையூரில் தங்கியிருந்த புத்தர் தத்தரைச் சந்தித்துவிட்டு ஈழத்து மகாவீரைக்குச் அங்கிருந்தபடியே புத்தகோசர் தனது ஆகச் சிறந்த ஆக்கமாகிய விசுத்திமக்காவை ஆக்கித்தந்ததாக தெரிகிறது.

### சோழர் வரலாற்றில் சிபி - செம்பியன்

இந்திய துணைக்கண்டத்தின் வரலாறுகள் தொகுக்கப்படுவதற்கு மிக மிக அடிப்படையாக அமைவது கௌதம புத்தர் என்று அறியப்பட்ட சித்தார்த்தின் வாழ்வாகும். இந்த மாமனிதரின்

வருகைக்கு பின்னரே மனித இருத்தலின் தேவையும் இன்றியமையாமையும் உணரப்பட்டது. அன்புமயமான, அறிவுமயமான, நாகரிகமயமான, வாழ்வுக்குள் மனித குழுக்கள் நுழைவதற்கான அனைத்து வெளிகளையும் திறந்து வைத்தவர் இவர். சித்தார்த்தனோடு தொடர்புடைய உயிர் நேசத்தை வலியுறுத்தும் நட்புக்கதை சிபி செம்பியன் எனப் பெருக்கப்பட்டு புத்த நெறிக்குட்பட்ட அரசின் பெருமிதங்கள் காக்கப்படுகிறது. சித்தார்த்தன்-தேவதத்தனோடு தொடர்புடைய புறாக்கதை (கிரவ்ஞ்சவத ஜாதக கதை) பாலி, சமஸ்கிருதம், தமிழ் என இந்திய துணை கண்டத்தின் ஆகப் பழைய மொழிகளில் இக்கதை ஊடாகிறது. கிள்ளி, சென்னி, செம்பியன் ஆகிய குடி மரபுகளை உடையது சோழ மரபு. புறாவுக்கு தன்னைக் கொடுத்த செம்பியன் சோழரின் முன்னோனாகக் குறிக்கப்படுகிறான்.

### புத்தப் பண்பாட்டில் முருகன்

மனித நடத்தைகளையும் செயல்பாடுகளையும் மேம்படுத்துவதில் நாட்டமுடைய புத்த நெறியோடும் கற்பனை, அவநம்பிக்கை, சூழ்ச்சி கடவுள் இவற்றோடு தொடர்புடைய சைவ, வைணவ சமயநெறியோடும் முருகன் தொடர்புபடுத்தப்பட்டுள்ள போதிலும் சிவனுக்கும் பார்வதிக்கும் பிறந்த மகனே முருகன் என்கிற கற்பிதம் பெரும்நம்பிக்கையாக பரவி உள்ளது.

குறிஞ்சி நில மக்களின் முன்னோன் ஆன குமரன் புத்தநெறியைச் சார்ந்த அரசன் என்கிற கருத்தை முதன் முதலில் தமிழ்ப் பரப்பில் முன்வைத்தவர் பண்டிதராவார். பிராமணசாதி, இடைநிலைச் சாதி அறிவாளிகளைப் போலத் தம் மக்கள், தம்முரிமை, தமது மரபு என்று தாழ்த்தப்பட்டோருக்கான பிரதிநிதியாக தனது நுட்பமானபுலமைத்துவத்தோடுகடனாற்றியவர் பண்டிதர். இவர், தாழ்த்தப்பட்டோருக்கான விடுதலை புத்தநெறியைச் சார்வதன் மூலம் சாத்தியமாகும் என்று நம்பி செயல்பட்டதில் பாபாசாகிப் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு முன்னோடியாவார்

**"பிணிமுக ஊர்தி ஒண்செய் யேனும்என"**

**- (புறம்.56)**

முருகன் மயில் கொடியையும் யானை வாகனத்தையும் உடையவனாகப் புறம்.56-ஆம் செய்யுள் குறிப்பிடுகிறது. கொடியும் வாகனமும் ஆரிய கந்தனிடமிருந்து கடன் வாங்கப்பட்டன. தமிழ் முருகனுக்கு வேல் மட்டுமே ஆயுதம். அதனால்தான் நெடுவேல் என்கிற ஆகுபெயர் முருகனைக் குறிக்கக் கூடியதாக தமிழில் காணப்படுகிறது.

இந்த நூலில் மூன்றில் ஒரு பகுதி பௌத்தம் சார்ந்தது. 'தமிழ் புத்த சங்கம்', 'புத்தகோசர்', 'தொல்கதை வரலாற்றில் சித்தார்த்தன்', 'பௌத்தப் பண்பாட்டில் முருகன்' ஆகிய இயல்கள் தமிழ் பௌத்தம் சார்ந்தவை. தமிழ் மரபு நீண்டகால எல்லையில் பயணித்து வருகிறது. தொல்சமயம், ஆசீர்வகம், சமனம், பௌத்தம், ஊடாக, இன்றைய சைவம், வைணவம் வரை அதன் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

### பார்வை நூல்கள்

1. மு.ரமேஷ் - எந்தை ( பழச்சமூக மொழிப் பண்பாட்டுக் கட்டுரை) , வெல்லம் சொல், 30அ, வி.ஓ.சி, தெரு, நங்கநல்லூர், செ-61, பிப்ர-2019.
2. புலியூர்க்கேசிகன் - புறநானூறு - ரிதம் புக் பதிப்பகம், டிசம்பர்-2022.
3. கௌமாரீஸ்வரி எஸ் - பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - சாரதா பதிப்பகம், செ-17, பதிப்பு 2009